ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

11.09.2025

1. கந்தமகா யுகம் படைக்க வேண்டி
கருணை கொண்டு செந்தூரானும்
எந்தனை அவதாரம் ஆக்கி
ஏழாம் படைவீடு படைத்து அருள

2. அருளவே அரங்கமகா ஞானியும்
ஆறுமுகனார் சோதி கலந்து
அருளுகிறேன் அருட்சுவடி வழி
ஆற்றல்மிக்க குருவார அருளாசி

3. ஆசிதனை விசுவாவசு யாளி திங்கள்
அறிவிப்பேன் வேத குருவார அருளாசி
நேசம்பட அரங்கன் என் படைகள்
நிலவுலகில் தருமம் காத்து வர

4. வருகவே சரவணஜோதியே நமோ நம என
வணங்கி பிரணவக் குடிலணுகி
முருகா அரங்கா என போற்றி
முழுமைபட சைவநெறி ஏற்று

5. ஏற்றுமே அன்னதான சேவையில்
எப்பொழுதும் தொடர் தருமமாக
பற்று கொண்டு உதவி வருகவே
பாவ வினைகள் அகன்று மேவி

6. மேவியே தன்பிறவி சூட்சுமமும்
முன்னேற உண்டான வழிவகையும்
அவணியில் ஞானிகள் ஆசிபட
அணுகுவார் யாவரும் கண்டு தேறுவர்

7. தேறவே பிரணவக் குடிலினில்
தொடர்பு கொண்ட மக்களும்
அறம் தரும வகை பொருளுதவி
அகிலத்தில் செய்து வருபவர்கள் தானும்

8. தானவர்கள் முருகப்பெருமானுடன்
தவராஜன் என் காட்சியும்
ஞானமாகக் கிட்டி சிறப்பர்
நம்பியே அரங்கன் என் வழிவர

9. வருகவே சத்ரு ருண ரோக
வஞ்சம் சூழ்ச்சி அணுகாமல்
தருமபலத்தால் பாதுகாப்பு கூடி
தரணியில் தனித்துவம் அடைவர்

10. அடையவே ஆனந்த ஞானவாழ்வு
அனைவரையும் சமமாகக் கருதும்
இடரில்லா ஞானபலமும் கூடி
எந்தனை உங்களுள் கண்டு

11. கண்டுமே தேறுவர் மாறுவர்
கலியிடர்களையும் வென்று
உண்டான பிறவாப் பேறு காண்பர்
உரைத்திட்ட அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி